2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

97—

பேருந்து வசதி

***11791—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு பேருந்து நிலையம் முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற செங்கல்பட்டு பேருந்து நிலையத்திலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு 19 பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதிகளே போதுமானதாக இருக்குமென்பது துறையினுடைய கருத்தாக இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில்தான் அரசு கலைக் கல்லூரி, அரசு சட்டக் கல்லூரி, மகளிர் கல்லூரி, அரசு மருத்துவமனை, நீதிமன்றம் ஆகிய அனைத்தும் இருக்கின்றன. இப்போது பிரச்சினை என்னவென்றால், திண்டிவனம், வந்தவாசி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் செல்கின்ற அனைத்து பேருந்துகளும் புறவழிச் சாலை வழியாக சென்றுவிடுகின்றன. எந்தப் பேருந்தும் செங்கல்பட்டு நகருக்குள்*

வந்து செல்வதில்லை. அதனால்தான் பேருந்துகளில் நெரிசல் ஏற்படுகின்றது. எனவே, மேற்கண்ட பேருந்துகள் நகருக்குள் வந்து செல்லும் வகையிலும், புறவழிச் சாலையில் செல்லும் பேருந்துகள் குறிப்பாக, மேற்கு, தென் மாவட்டங்கள் செல்லும் பேருந்துகள் bridge-க்குக்கீழ் நின்று பயணிகளை ஏற்றிக் கொண்டு செல்வதற்கும் வழிவகை செய்யுமாறு தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், ஏற்கெனவே துறையிலிருந்து வந்த கருத்துப்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு 19 வழித்தட எண்களான பேருந்துகள் இயக்கப்படுகின்றன.* T29A, T34, T78A, T9A, T12A, T24A, T22A, 227A, T29CB, T29CC, T14, T13, T18, T16A, T22A, T56B, T68A, T68B, T68D *போன்ற வழித்தட பேருந்துகள்மூலம் போதுமான நடைகள் இயங்குவதாக தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அன்புச் சகோதரி அவர்களுடைய கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது. புறவழிச் சாலை வழியாக செல்லுகின்ற பேருந்துகளை இணைத்து, துறை ரீதியான அதிகாரிகளை அங்கே நிறுத்தி, அந்தப் பேருந்துகள் மக்களை ஏற்றிச் செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். செங்கல்பட்டிலிருந்து சிங்கபெருமாள் கோவில் வழியாக அனுமந்தை செல்லும் பேருந்து 1 கிலோ மீட்டர் இருக்கின்ற அஞ்சூருக்குச் செல்லாமல் திரும்பி விடுகின்றது. எனவே, அதனை அஞ்சூர் வரைக்கும் நீட்டித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். செங்கல்பட்டிலிருந்து சென்னை பெசன்ட் நகர் வரை ஒரு பேருந்து வசதி ஏற்படுத்தித் தருமாறும், தாம்பரத்திலிருந்து திருக்கச்சூர் மறைமலைநகர் வழியாக பேரமனூர் சென்று கொண்டிருந்த பேருந்து நீண்ட நாட்களாக*

2023 ஏப்ரல் 1]

இயக்கப்படாத காரணத்தினால் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள், வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மேற்கண்ட வழித்தட பேருந்துகளும் தொடர்ந்து இயக்கப்பட வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்புச் சகோதரி அவர்கள் 3 பேருந்து வழித்தடங்கள் கேட்டிருக்கிறார்கள். அதில் ஒன்று புதிய பேருந்து வழித்தடம் பெசன்ட் நகர் வருவதற்கு; அது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற புதிய பேருந்துகள் வந்த பிறகு ஏற்பாடு செய்யப்படும். மற்ற இரண்டு பேருந்து வழித்தடங்களில் ஒன்று நீட்டிப்பு, இன்னொன்று ஏற்கெனவே சென்ற பேருந்து வரவில்லை என்று சொல்கிறார். இரண்டையும் எழுத்துப்பூர்வமாகக் கொடுத்தால் உடனடியாக இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.*

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் ராஜபாளையம் தொகுதியிலே தனியாக புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் அமைக்க உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பரிந்துரை செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், ராஜபாளையம் தொகுதி மக்கள் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதியிலே தளவாய்புரம் தொழில் நிறைந்த பகுதியாகும். எனவே, தளவாய்புரம் முதல் சென்னை, ஈரோடு, கோயம்புத்தூர், நாகர்கோவில், செங்கோட்டை ஆகிய ஊர்களுக்கு புதிய பேருந்தை இயக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி சொன்ன உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வழித்தடங்களைக் கேட்கிறார். புதிய பேருந்துகள் வரும்போது அவர் சொன்ன வழித்தடங்களில் எந்த அளவிற்கு பேருந்து இயக்குவது சரியாக இருக்கும் என்பதனை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

98—

குடமுழுக்கு

***66393—திரு. இரா. காமராஜ்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருவாஞ்சியம் அருள்மிகு வாஞ்சிநாதசுவாமி திருக்கோயிலின் குடமுழுக்குப் பணிகளை விரைவாக முடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாஞ்சியம் பகுதியிலே அமைந்திருக்கின்ற வாஞ்சிநாதசுவாமி திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு செய்யப்படுமா என்ற வினாவிற்கு விடையாக அந்தத் திருக்கோயிலிலே 23 பணிகள் 61 இலட்சம் ரூபாய் செலவிலே உபயதாரர்கள் நிதியிலே நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 5 பணிகள் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் நம்முடைய